ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2436/02 - 2025 මැයි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.05.15

2436/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

சுங்கக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 235)

***101 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்***

**மோட்டார் வாகனங்களுக்கான சுங்கப் பெறுமதி (விலை) கணிப்பீடுசெய்தல்**

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரிவு 101 (1) (ஏ) இனால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பின்பற்றி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், 2016, யூன் 14 ஆந் திகதிய 1971/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறையை இதன் மூலம் மேலும் திருத்துவதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு (1) (இ) இனை உள்ளீடு செய்வதன் மூலம் இது 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 இன் இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான சுங்கப் பெறுமதியினை கணக்கிடுவதற்கான அடிப்படையை பரிந்துரைக்கிறது. இந்த ஒழுங்குவிதியானது 2025, மே 16 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும்.

*(1) (இ) சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு 69 இன் கீழ் வழங்கப்பட்ட முறி வசதி உற்பத்தி ஒன்றின் கீழ் புதிய மோட்டார் வாகன கூறுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட / பொருத்தப்பட்ட இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்புகள் 87.02, 87.03, 87.04, 87.05 மற்றும் 87.11 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட முடிக்கப்பட்ட மோட்டார் வாகனத்தின் சுங்கப் பெறுமதி*

1A- PG 7091 - 429 (05/2025)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தொடர்பாக இறக்குமதி செய்யும் போது மட்டுமே பொருந்தக்கூடிய வரிகளைக் கணக்கிடும் நோக்கத்துக்காக, கைத்தொழில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் சதவீத மதிப்பாக பரிந்துரைக்கப்படும் மேற்கூறிய மோட்டார் வாகனத்தின் தயாரிப்பு /பொருத்துதல் தொடர்பான உள்நாட்டு மதிப்பு கூட்டல் விலக்கப்படல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
*நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2025, மே 15 ஆம் திகதி.*

EOG 05 - 0075

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.